2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள். அவர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு Techno Park கேட்கிறார்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

139—

புதிய காப்பீட்டுத் திட்டம்

***3674—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பட்டியல் இனத்தவர் நடத்தும் மருத்துவமனைகளையும் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் எந்த ஒரு பாகுபாடுமின்றி, தகுதிவாய்ந்த அனைத்து மருத்துவமனைகளுக்கும், பட்டியல் இனத்தவர் நடத்தும் மருத்துவமனைகள் உட்பட, அம்மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் தகுதிகளும், தரமும் அவை பெற்றிருப்பின் அவை முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனம், United India Insurance நிறுவனம் மருத்துவமனைகளின் அனுமதி மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் Empanelment and Disciplinary Committee ஒப்புதல் பெற்று மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

முற்பகல் 10-55

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ரூ.750 கோடி செலவில் அமலாக்கப்படுகிறது. இந்த 750 கோடி ரூபாயில் Special Component Plan என்று அழைக்கப்படும் உட்கூறு திட்டத்திலிருந்து மட்டுமே ரூ.250 கோடி ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு மூன்றிலே ஒரு பகுதி நிதி SCP சிறப்பு உட்கூறு திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டும்கூட, கடந்த ஆட்சியிலே ஏறக்குறைய 2,000-க்கும் மேற்பட்ட தனியார் மருத்துவமனைகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டும், எண்ணற்ற தாழ்த்தப்பட்ட பட்டியலினத்தைச் சார்ந்த மக்கள் நடத்தக்கூடிய ஒரு மருத்துவமனைகூட அந்தப் பட்டியலிலே சேர்க்கப்படாத ஒரு அவல நிலை இருந்தது. அதனுடைய அடிப்படையில் இந்தக் கேள்வி எழுந்தது. நமது ஆட்சியிலே தவறு நடக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. ஏனென்று சொன்னால், இதில் மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயம், அரசு நேரடியாகப் பயனாளிகளைத் தேர்வு செய்வதில்லை. United India Insurance Company என்ற நிறுவனம் தேர்வு செய்கிறது. அவர்கள் Franchise-ஐ வேறு சில நிறுவனங்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் என்ன தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், மருத்துவமனைகளைத் தரம் பிரிக்கின்றபோது, வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று தரம் பிரித்து ஒதுக்கிவிடுகிறார்கள். எனவே, அதுபோன்ற தவறுகள் நடைபெறாவண்ணம், எதனடிப்படையில் இந்த மருத்துவமனைகள் தரம் பிரிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டதைச் செயல்படுத்தும் United India Insurance நிறுவனம், மருத்துவர்கள் மற்றும் நிபுணர்கள் சேர்ந்த ஒரு குழுவை அமைத்து,

2012 ஏப்ரல் 20]

மருத்துவமனைகளை ஆய்வு செய்து, அடிப்படைத் தகுதிகள் இருக்கும் மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அடிப்படை வசதிகளாக 30 படுக்கை வசதி, 5 படுக்கைகள் கொண்ட தீவிர நோய் சிகிச்சைப் பிரிவு (ICU) ஆகிய வசதிகள்கொண்ட மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. மேற்கொண்டு C.T. Scan, M.R.I. Scan, சிறப்புச் சிகிச்சை அளிக்கும் திறனுள்ள சிறப்பு வசதிகளைப் பொறுத்து, கூடுதலாக மதிப்பெண்கள் வழங்கப்பட்டு தரம் பிரிக்கப்படுகின்றன. அதிகபட்சமாக 51 மதிப்பெண்கள் கொடுக்கப்படுகின்றன. மருத்துவமனைகளின் தரம், மதிப்பெண்கள் 41-க்குமேல் இருந்தால் A1 என்று குறிப்பிடுகின்றோம். மதிப்பெண்கள் 10-க்குமேல் இருப்பவர்கள் A6 என்று குறிப்பிடுகின்றோம். இவ்வாறு தரம் பிரிக்கப்பட்டபின், மருத்துவமனைகளின் அனுமதி மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில், Empanelment and Disciplinary Committee-ல் United India Insurance Company-இன் பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், Tamil Nadu Health System Project-இனுடைய திட்ட இயக்குநர் மற்றும் அதிகாரிகள் அந்த மருத்துவமனையின் தகுதி மற்றும் தரம் குறித்து ஆய்வு செய்து, மருத்துவமனைகளைக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கிறார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே சில பிரச்சினைகள் இருந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் அதுமாதிரியான பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் கூடாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். **

திரு. எம். ஆறுமுகம்: **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.